பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**30 06 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** முப்படைகள் மற்றும் இந்திய கடலோர காவல்படையைச் சேர்ந்த வீரர்களின் சிறப்பான சேவைகளை பாராட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருதுகளை வழங்கினார்.

**2.** ஆஃப்கனிஸ்தான் மீது பாகிஸ்தான் நடத்திய வான்வெளி தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**3.** முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களின் நியாயமான கோரிக்கைகள் சமமாக கருதப்படும் என்று நீர்வளத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு தலைவர் திரு. ராஜீவ் பிரதாப் ரூடி கூறியுள்ளார்.

**4.** ஹோர்முஸ் நீரிணை விவகாரத்திற்கு தீர்வு காணும் வகையில் அமெரிக்கா - ஈரான் இடையேயான பேச்சுகள் இன்று தோஹாவில் நடைபெற உள்ளது.

**5.** உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரேசில் அணியும், பராகுவே அணியும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

முப்படைகள் மற்றும் இந்திய கடலோர காவல்படையைச் சேர்ந்த வீரர்களின் சிறப்பான சேவைகளுக்கான விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வழங்கினார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மொத்தம் 105 வீரர்களுக்கு இந்த விருதுகளை அவர் வழங்கினார்.

சர்வோத்தம் யூத் சேவா பதக்கம் 7 பேருக்கும், பரம் விசிஷ்ட் சேவா பதக்கம் 30 பேருக்கும் இருவருக்கும், உத்தம யூத் சேவா பதக்கம் 12 பேருக்கும், அதி விசிஷ்ட் சேவா பதக்கம் 56 பேருக்கும் குடியரசுத்தலைவர் வழங்கினார்.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களின் நியாயமான கோரிக்கைகள் சமமாக கருதப்படும் என்று நீர்வளத்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு தலைவர் திரு. ராஜீவ் பிரதாப் ரூடி தெரிவித்துள்ளார்.

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கேரள மாநிலம் இடுக்கியில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

பின்னர் பேசிய அவர், அணையின் முழுமையான பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்வது குறித்து இக்குழு கவனம் செலுத்துவதாக தெரிவித்தார்.

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இந்த விவகாரத்திற்கு தீர்வு காண சமநிலையான அணுகுமுறை அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

தமது பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் முன்பு இரண்டு மாநிலங்களும் முன்வைத்த தொழில்நுட்ப மற்றும் சட்ட ரீதியான வாதங்களை நாடாளுமன்ற நிலைக்குழு முழுமையாக மதிப்பீடு செய்யும் என்று திரு. ராஜீவ் பிரதாப் ரூடி குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தான் மீது பாகிஸ்தான் நடத்திய வான்வெளி தாக்குதலில் பொதுமக்கள் 36 பேர் உயிரிழந்துள்ளதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தானின் இச்செயல் ஆஃப்கனிஸ்தானின் இறையாண்மை மீதான தாக்குதல் என்றும், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தனது உள்நாட்டு தோல்விகளை மறைக்க இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலில் உயிரிழந்த ஆஃப்கனிஸ்தான் குடும்பத்தினருக்கு இந்தியா தமது இரங்கலைத் தெரிவிப்பதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளது.

ஆஃப்கனிஸ்தானின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு இந்தியா தனது ஆதரவை உறுதிப்படுத்துவதாகவும் வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

சீன ராணுவம் அருணாச்சலப்பிரதேசத்தில் ஊடுருவி முகாம்களை அமைத்ததாக வெளியான செய்தி தவறானது என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

எந்த அடிப்படையும் இன்றி இந்த தகவல் தவறாக பரப்பப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

<<<<>>>>

தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்புக்கான அரசின் மொத்த நிதி ஒதுக்கீடு 60 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடு உள்கட்டமைப்பு மற்றும் நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்கான மத்திய அரசின் முதலீட்டு உறுதிப்பாட்டை காட்டுகிறது.

<<<<>>>>

மேற்குவங்க பொதுப் பாதுகாப்பு மற்றும் சமூக விரோத செயல்கள் தடுப்பு மசோதா, மேற்குவங்க பொது ஒழுங்கு பராமரிப்பு திருத்த மசோதா ஆகியவை அம்மாநில சட்டப்பேரவையில் நிறைவேறியது.

பொதுப் பாதுகாப்பு மசோதாவின்படி பொது அமைதியை குலைக்கும் வகையில் சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு அதிகபட்சமாக 12 மாதங்கள் வரை காவலில் வைக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆந்திர மாநிலத்தில் இன்று முதல் இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

விஜயநகரத்தில் உள்ள மத்தியப் பழங்குடியின பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

நாளை அனந்தபுரமுவில் உள்ள மத்தியப் பல்லைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் குடியரசுத்தலைவர் பங்கேற்கிறார்.

<<<<>>>>

சட்டத்தின் முன்பு குடிமக்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதை சட்டத்தின் ஆட்சி வலியுறுத்துவதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தெரிவித்துள்ளார்.

ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற ஜனநாயக மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய அவர், சட்டத்தின் ஆட்சி என்பது வெறும் நலத்திட்டமாகவோ, பொருளாதார கொள்கையாகவோ மட்டுமே இருக்க கூடாது என்று வலியுறுத்தினார்.

தனிநபர் சுதந்திரங்களைக் காப்பதில் சட்டத்தின் ஆட்சி, நீதித்துறை சுதந்திரம் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

நீதித்துறை மறுஆய்வு என்பது வெறும் அதிகாரம் என்று மட்டுமல்லாமல் அது நீதிமன்றங்களுக்கான அரசியல் சாசன கடமை என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா - கிரீஸ் இடையேயான பொருளாதார கூட்டாண்மையை வலுப்படுத்துவது குறித்து மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கிரீஸ் நாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **Takis Theodorikakos** உடன் விவாதித்தார்.

ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற இந்தப் பேச்சுகளின் போது வர்த்தகம், முதலீடு, தொழில்துறை ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவது குறித்து இரு நாட்டு அமைச்சர்களும் விவாதித்தனர்.

இரு நாடுகளுக்கு இடையே உற்பத்தி, புத்தொழில் நிறுவனங்கள், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணை விவகாரத்திற்கு தீர்வு காணும் வகையில் அமெரிக்கா - ஈரான் இடையேயான பேச்சுகள் இன்று கத்தார் தோஹாவில் நடைபெற உள்ளது.

உலகின் **20** சதவீதம் அளவிலான கச்சா எண்ணெய் செல்லும் இந்த நீர்வழிப்பாதை தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையே மீண்டும் சர்ச்சை எழுந்த நிலையில் இந்த சந்திப்பு நடைபெற உள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையே நடைபெற்று வரும் மோதலால் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் வர்த்தக் போக்குவரத்து முடங்கியுள்ள நிலையில், அதற்குத் தீர்வு காணும் வகையில் பேச்சுகள் நடைறெ உள்ளது.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களில் பெய்த கனமழையால் பல்வேறு பகுதிகளில் சாலைகளும், பாலங்களும் அடித்துச் செல்லப்பட்டன.

அருணாச்சலப்பிரதேசத்தின் **12** மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அசாமில் **69** கிராமங்களில் சுமார் **16** ஆயிரம் பேர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த **5** நாட்களுக்கு கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, தில்லி மற்றும் உத்தரப்பிரதேசத்தின் பல பகுதிகளில் வெப்பநிலை இயல்பை விட அதிகரித்திருந்ததாக கூறியுள்ளது.

இதனால் அடுத்த 2 நாட்களுக்கு உத்தரப்பிரதேசம் மற்றும் அருகே உள்ள மாநிலங்களில் கடும் வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கேரள மாநிலம் காசர்கோடு, கண்ணூர் மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அம்மாநிலத்தின் இதர 7 மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.

இந்நிலையில் கேரளாவின் தென் பகுதிகளில் மழையின் தீவிரம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரள மாநிலத்தின் கடலோர பகுதிகளில் நாளை மறுநாள் வரை கடலுக்குச் செல்ல மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரேசில் அணியும், பராகுவே அணியும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்ற போட்டியில் பிரேசில் **2-1** என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

பாஸ்டனில் நடைபெற்ற ஆட்டத்தில் பராகுவே பெனால்டி ஷூட்அவுட் முறையில் **4-3** என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வென்றது.

கனடா அணி ஏற்கனவே காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------------

அமெரிக்கா **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா இன்று தென்கொரியாவின் **Cheonhui Joo**-வை எதிர்கொள்கிறார்.

-------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் தக்ஷிநேஷ்வர் சுரேஷ் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**